தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-2-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**<u>வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அதிகாரிகள் / அலுவலர்கள் மாநாடு</u>**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அதிகாரிகள் / அலுவலர்கள் மாநாடு மார்ச் 1-2, 2013 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டின் வருடாந்திரக் கூட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதால் இப்பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் தமிழக அரசின் வேளாண்மைத் துறை விரிவாக்க அதிகாரிகள் மற்றும் அலுவலர்களிடையே கலந்துரையாடல் நடைபெற வாய்ப்பாக அமைந்துள்ளது.

இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்பங்கள் உழவர் சமுதாயத்திற்கும் மற்றும் பிற பயனீட்டாளர்களுக்கும் தேவையின் அடிப்படையில் வழங்குவதாகும்.

இம்மாநாட்டில் தமிழக அரசின் வேளாண்மைத் துறை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் அவர்களுடன் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதை சான்றளிப்புத் துறை, வேளாண் விற்பனைத் துறை, சர்க்கரைத் துறை, பட்டுப்புழுவியல் மற்றும் வனவியல் துறை அலுவலர்கள் பங்கேற்று தமிழகத்தில் வேளாண்மை முன்னேற்றத்திற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்களைக் குறித்து பேச உள்ளனர். இப்பல்கலைக்கழகம், பல்வேறு துறைகளுடன் முன்கூட்டியே கலந்துரையாடல் நிகழ்த்தி அதன் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகளை இம்மாநாட்டில் வைக்க உள்ளது. சில பிரச்சனைகளுக்கு அறிவியல் பூர்வமான தீர்வுகளைக் கொடுக்க உள்ளது. வேளாண்மையின் தற்போதைய பிரச்சனைகளும் பேசப்பட உள்ளன.

இம்மாநாட்டில் சுமார் 300 பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண் தொழிற்சாலைகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் முன்னோடி வங்கிகள் அழைக்கப்பட்டு அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள உள்ளனர்.

2013ம் ஆண்டில் நடைபெறும் இந்த வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அதிகாரிகள் / அலுவலர்கள் மாநாட்டின் முக்கியத்துவம் என்னவெனில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. செ. தாமோதரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக நிறைவு விழாவில் கலந்து கொள்கிறார். திரு. சந்தீப் சக்ஸேனா, இ.ஆ.ப., வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் அவர்கள் தமிழக அரசின் வேளாண்மைத் துறை, முனைவர் கு. இராமசாமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் பிற அதிகாரிகள் / அலுவலர்கள் இதில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்